# பைத்துல் முகத்தஸ் உலக முஸ்லிம்களின் புனித பூமியாகும் அதன் மீட்சிக்கு எமது உணர்வுகள் ஒன்றுபட வேண்டும்

**மௌலவி. கே.எம்.எச். காலிதீன்,**
**(தலைவர், மொழிகள் கலாசாரத்துறை)**

மேற்கத்திய ஏகாதிபத்தியவாதிகளின் திட்டமிடப்பட்ட சதிகளினால் உலக முஸ்லிம்களின் புனித தலமான மஸ்ஜிதுல் அக்ஸாவும், பலஸ்தீனமும் ஸியோனிச யகூதிகளால் ஆக்கிரமிப்புக்குள்ளாக் கப்பட்டுள்ளது. பலஸ்தீனத்தில் வாழ்ந்த நாற்பது இலட்சம் முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். சொந்த மண்ணிலிருந்து விரட்டப்பட்ட பலஸ்தீன முஸ்லிம்கள் மத்திய கிழக்கு நாடுகளிலும், ஏனைய நாடுகளிலும் தமது அகதி வாழ்க்கையைக் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொண்டுள்ளனர். பலஸ்தீனில் வாழும் முஸ்லீம்களையும் வெளியேற்றி, அதனை முழுமையாகத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர, அல்லாஹ்வின் சாபத்துக்குள்ளான ஸியோனிஷ யூதர்கள் தொடர்ந்தும் முஸ்லீம்களுக்குக் கொடுமைகள் இழைத்து வருகின்றனர். ஆகவேதான் பலஸ்தீன மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கும், புனித மஸ்ஜிதுல் அக்ஸாவை மீட்டெடுப்பதற்கும் எமது ஐக்கிய உணர்வுகளையும், ஆதரவையும் பலஸ்தீன முஸ்லீம்களுக்கு அளிப்பது கடமையாகின்றது.

பலஸ்தீனம் பல இறைத்தூதர்களின் பிறப்பிடமாகவும், இருப்பிடமாகவும் அமைந்துள்ளது. அங்குள்ள புனித மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து தான் இறுதித் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் "மிஃராஜ்" என்னும் விண்ணுலக யாத்திரையை மேற்கொண்டார்கள். இதனை அல்குர்ஆன் சிலாகித்துக் கூறுகையில், "(அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன். அவன் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) என்னும் தன் அடியாரைக் கஃபாவாகிய) சிறப்புற்ற பள்ளியிலிருந்து (வெகு தூரத்தில் இருக்கும் பைத்துல் முகத்தஸிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓரிரவில் அழைத்துச் சென்றான். (அவ்வாறு அழைத்துச் சென்ற) நாம் அதனைச் சூழவுள்ள பூமிகளை ஆசீர்வதித்துள்ளோம். நம்முடைய திருஷ்டாந்தங்களை

அவருக்குக் காண்பிப்பதற்காகவே அழைத்துச் சென்றோம். நிச்சயமாக (உமதிறைவனாகிய) அவனே செவியுறுவோனாகவும், உற்று நோக்குவோனாகவும் இருக்கின்றான்." (பனீ இஸ்ராயீல் : 1) என விபரிக்கின்றது.

இறைத்தூதர்கள் அன்னவரையும் விசுவாசிக்கும் முஸ்லீம்களுக்குச் சொந்தமான பூமியாகிய பலஸ்தீனத்தையும் புனிதத் தலமான மஸ்ஜிதுல் அக்ஸாவையும் கி.பி.7ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து பெற்றுக் கொடுத்தவர்கள் அமீருல் மு.்.மினீன் கலீபா உமர் (ரலி) அவர்களாவர். அன்றிலிருந்து அது முஸ்லீம்களின் புனித பூமியாகவும், ஏனைய சமயத்தவர்கள் தரிசிக்கும் தலமாகவும் பாதுகாக்கப்பட்டு வந்தது. சுமார் ஐந்து நூற்றாண்டுகள்வரை முஸ்லீம்களது பராமரிப்பில் இருந்து வந்த பைத்துல் முகத்தஸ் சிலுவைப் போர் வீரர்களால் பன்னிரெண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

மஸ்ஜிதுல் அக்ஸாவை மீட்டெடுப்பதற்காகப் பல தசாப்தங்கள் முஸ்லீம் ஆட்சியாளர்கள் மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளின் சிலுவைப் போராளிகளுடன் போராடியதன் விளைவாக பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அதனை மீண்டும் மீட்டெடுத்தார். கடந்த ஏழரை நூற்றாண்டுகளாக மீண்டும் முஸ்லீம்களின் ஆட்சியில் பலஸ்தீனமும், மஸ்ஜிதுல் அக்ஸாவும் நிலைபெற்று வந்துள்ளது. பிரான்ஸில் நெப்போலியன் பொனப்பாட்டினால் உருவாக்கப்பட்ட பிரான்ஸியப் புரட்சியின் இலட்சியங்களில் ஒன்று; முஸ்லீம் உலகைச் சீர்குலைப்பதாகும். உதுமானிய சாம்ராச்சியத்தைப் பலவீனப்படுத்தித் தேசியவாதத்தின் மூலம் அறபு நாடுகளைப் பிரிப்பதற்கு நெப்போலியன் திட்டமிட்டுச் செயற்பட்டதானது, மேற்குலகின் ஆதிக்கம் முஸ்லீம் நாடுகளில் ஊடுருவ வழி அமைத்தது. மத்திய தரைக் கடல் நாடுகளைத் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர எகிப்தையும், பலஸ்தீனத்தையும், லெபனானையும் கைப்பற்றும் நோக்குடன் நெப்போலியன் செயற்பட்டான். அவனே முதலாவது நவீன ஸியோனிஸ சக்தியினை உருவாக்கி அறிமுகப்படுத்தியவன். அவனது தேசியவாதக் கொள்கைகளால் கவரப்பட்ட அறபு நாடுகள்,

அறபு தேசியவாதத்தை முன்வைத்து உதுமானிய சாம்ராச்சியத்துக்கு எதிராகப் போராட்டத்தை ஆரம்பித்தன. தேசிய வாதம் அரபு நாடுகளில் மேலோங்கியது. முஸ்லிம் உலகம் சிதைவடைய அது வழிவகுத்தது.

அறபு நாடுகளின் போராட்டம் முஸ்லீம் உலகின் ஐக்கியத்தைக் குலைக்க வழி வகுத்தது. உதுமானிய சாம்ராச்சியம் பிளவுற்று பலவீனமடைந்தது. பலஸ்தீனமும் படிப்படியாகப் பிரித்தானியாவின் ஆதிக்கத்துக்குட்பட்டது. உலகில் வாழும் யூதர்களை ஒன்றுதிரட்டிப் பலஸ்தீனில் குடியேற்றும் திட்டம் ஐரோப்பிய நாடுகளிடம் இருந்தது. பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியவை இம்முயற்சியில் முன்னின்று செயற்பட்டன.

அறபு நாடுகளின் நண்பனாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட தோமஸ் எட்வேட் லோரண்ஸ் (லோரண்ஸ் ஒப் அரேபியா) இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அறபு நாடுகளில் ஊடுருவி, அறபு நாடுகளின் புரட்சி இயக்கங்களை உருவாக்கினான். இப்புரட்சி இயக்கவாதிகளே பலஸ்தீனத்தைப் பிரித்தானியாவிடம் கையளிக்கக் காரணஸ்தர்களாக விளங்கினர். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் 1948 ஆம் ஆண்டில் பலஸ்தீனத்தில் யூதர்களைக் குடியேற்றும் திட்டங்களை ஏகாதிபத்திய நாடுகள் முன்னின்று நடைமுறைப்படுத்தின. அறபு நாடுகள் மேற்கு நாடுகளின் பொம்மைகளாக மாறின. பலஸ்தீனத்தில் வாழ்ந்த முஸ்லீம்களை அராஜக முறையில் வெளியேற்றியபோது அதனைத் தட்டிக் கேட்கும் சக்தி முஸ்லீம் நாடுகளுக்கு இருக்கவில்லை. பலஸ்தீனத்தையும், லெபனானையும் மேற்கு நாடுகள் ஆக்கிரமிப்புச் செய்தன. பலஸ்தீனில் யூதர்களின் ஆதிக்கம் மேலோங்கியது. ஸியோனிச ஏகாதிபத்தியம் முனைப்படைந்தபோது அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத அறபு நாடுகள், தங்களது தவறை உணர்ந்து, 1967 ஆம் ஆண்டில் இஸ்ரவேலுக்கு எதிரான போராட்டத்தை எகிப்தின் தலைமையில் ஆரம்பித்தன. ஆறு நாட்களுக்குள் பலஸ்தீனத்தின் பெரும்பகுதியையும் எகிப்து, சிரியா, ஜோர்டான் ஆகிய நாடுகளின் பிரதேசங்களையும் இஸ்ரேலியப் படைகள் கைப்பற்றின. அறபுலகமும், முஸ்லீம்களும் தலைகுனியும்

நிலைக்குள்ளாகினர். திட்டமிடப்பட்ட மேற்கத்திய ஆதிக்கம் பலஸ்தீனில் யூதர்களைக் கொண்டு செயற்படுத்தப்படுகிறது.

1967 ஆம் ஆண்டு மத்திய கிழக்கு யுத்தத்தின் பின்னர், பாபுல் ம..ரிபாவை இஸ்ரேலியர் தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். மஸ்ஜிதுல் அக்ஸாவில் ஜும்மா இடம்பெறுவது கூட, ஒரு கட்டத்தில் தடைசெய்யப்பட்டது. 1970 ஆம் ஆண்டில் கறுப்பு செப்டம்பர் என அழைக்கப்படும் தினத்தில் ஆயிரக்கணக்கான பலஸ்தீன முஸ்லீம்கள் ஜோர்தான் சப்ரா, சத்தில்லா அகதி முகாம்களில் ஸியோனிஷ இஸ்ரவேல் படையினரால் பயங்கரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

நூருத்தீன் சாங்கி அமைத்த மஸ்ஜிதுல் அக்ஸாவின் மி..ராபுக்குத் தீயும் இடப்பட்டது. மஸ்ஜிதுல் அக்ஸாவைத் தரை மட்டமாக்கும் திட்டம் கூட, ஸியோனிச இஸ்ரவேலிடம் இருந்தது. அவர்கள் சுரங்கப் பாதையை அமைத்து மஸ்ஜிதுல் அக்ஸாவை அழிக்கவும் முனைந்தனர். 1982 ஆம் ஆண்டில் மஸ்ஜிதுல் அக்ஸாவில் தொழுகையில் ஈடுபட்டிருந்த அறுபது முஸ்லீம்கள் இஸ்ரவேலியப் படைவீரன் அலென்குட்மேன் என்பவனால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். 1983 ஆம் ஆண்டில் மஸ்ஜிதுல் அக்ஸாவின் வக்பு பிரிவுக் கட்டடம் இஸ்ரவேலின் புதைபொருள் ஆராய்ச்சியினரால் திட்டமிடப்பட்டு அழிக்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டுகளில் மஸ்ஜிதுல் அக்ஸாவைத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் முயற்சியில் இஸ்ரவேலியப் படைகள் அதனுள் நுழைந்தன. 1988 ஆம் ஆண்டுகளில் நூற்றுக் கணக்கான முஸ்லீம்கள் மஸ்ஜிதுல் அக்ஸாவில் வைத்து மேலும் கொலை செய்யப்பட்டனர். இவ்வாறு தொடர்ச்சியாகப் பலஸ்தீன முஸ்லீம்கள் கொலை செய்யப்பட்டது மட்டுமன்றி, பெருங் கொடுமைகளுக்குள்ளாகியும் வருகின்றனர். உலகத்தில் இறைவனால் சபிக்கப்பட்ட இனமாக விளங்கும் யூத சமூகத்தைப் பற்றி அல்குர்ஆன் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றது.

“(இஸ்ராயீலின் சந்ததிகள்) தங்களுடைய உறுதிமொழிக்கு மாறு செய்ததன் காரணமாக, நாம் அவர்களைச் சபித்து, அவர்களுடைய இருதயங்களை இறுகச் செய்து விட்டோம். (ஆகவே) அவர்கள்

வேத வசனங்களை, அவற்றின் உண்மை அர்த்தங்களில் இருந்து புரட்டுகின்றார்கள். அன்றி, நம்முடைய இந்நபியைப் பற்றி அதில் அவர்களுக்கு நினைவூட்டல் பாகத்தையும் மறந்து விட்டார்கள். ஆகவே நபியே! அவர்களில் சிலரைத் தவிர அவர்களில் பெரும்பாலானோரின் மோசடியைப் பற்றிய செய்தியை நீர் அடிக்கடி தவறாமல் கேள்விப்படுவீர். ஆகவே இவ்வற்பர்களை, நீர் மன்னித்துப் புறக்கணித்து விடுவீராக. நிச்சயமாக அல்லாஹ் நற்செயல் புரிவோரை நேசிக்கின்றான்'' (அல்குர்ஆன் 5:13).

இஸ்ரேலியர்களின் அரக்கத்தனமான சித்திரவதை செய்தல், சிறையிலிடல், தொடர்ச்சியாக அடித்துத் துன்புறுத்தல் ஆகியன தொடர்கின்றன. பலஸ்தீன முஸ்லீம்களால் ஏதாவது தாக்குதல் இடம்பெற்றால் அதற்குக் கொடூரமான எதிர்த் தாக்குதல்கள் இஸ்ரேலிய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறான ஒரு நிகழ்வு 08-12-1987 ஆம் ஆண்டில் இடம்பெற்றது. இஸ்ரேலியர் ஒருவர் பலஸ்தீனப் போராளிகளால் கொலை செய்யப்பட்டபோது நான்கு பலஸ்தீன முஸ்லீம்கள் உடனடியாகக் கொலை செய்யப்பட்டனர். அதிகமானோர் இஸ்ரேலியப் படையினரால் காயத்துக்குள்ளாக்கப்பட்டனர்.

காஸாப் பள்ளத்தாக்கிலும், ஜுபைலா கிராமத்திலும் அன்று பெரும் கிளர்ச்சிகள் உருவாகின. அன்றிலிருந்து உருவானதே ''இந்திபாழா'' என்னும் பலஸ்தீன முஸ்லீம்களின் இஸ்ரேலியர்களுக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டமாகும். இப்போராட்டத்தில் ஹமாஸ், ஜிஹாத் - போராட்டக் குழுக்கள் முக்கிய பங்கேற்கின்றன. இது இஸ்ரேல் இராணுவத்துக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன் பலஸ்தீன முஸ்லீம்களால் 1987 டிசம்பரில் ஆரம்பிக்கப்பட்ட ''இந்திபாழா'' என்னும் தற்காப்புப் போராட்டமும், ஜிஹாதும் பலஸ்தீன முஸ்லீம்களின் வரலாற்றில் முக்கிய திருப்பங்களாக அமைந்துள்ளன. கற்களைக் கொண்டு தங்களது போராட்டத்தை ஆரம்பித்த அவர்கள், ஜிஹாதினை முன்னெடுத்துத் தங்களது உயிர்களைப் பணயம் வைத்து தங்களது

நாட்டை அபகரிக்கும் ஸியோனிச எகூதிகளுடன் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். ஸியோனிச யூதர்கள் பலஸ்தீனியர்களைக் கொன்றொழிப்பதிலும், இவர்களது நிலங்களைத் தங்களது உடைமையாக ஆக்கிக் கொள்வதிலும் முனைப்புடன் இருக்கின்றனர். அண்மைக் காலத்தில் முன்னூறு ஏக்கருக்கு மேலான காணிகள் குறிப்பாக அல்மாஸ்ரி, அல்நஜார், அல்ஸார், அல்சகா, அல்தூபாஸி ஆகிய குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகள் ஸியோனிச யூதர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன.

பலஸ்தீனியர்களுக்குச் சொந்தமான வீடுகளை அழித்து, அவர்களை அகதிகளாக்கி, அகதி முகாம்களுக்கு அனுப்பிய பின்னர் அவ்விடங்களை யூதர்களுக்குச் சொந்தமாக்கும் தந்திரத்தையும் கையாண்டு வருகின்றனர். பைத் கனீனா, ராம், ரூஸ் அல் அமூத், ஜபல் அல் மகாபர், செய்க் ஜராஹ், அல்ஜீப், பைர்நிபாலா, ஸாவார் வாஹிர்அல் சய்ம், அனதா, அல் இஸ்ஸாவியா, ஸில்வான், பழைய நகரப் பகுதிகள் ஆகியவற்றில் அமைந்துள்ள பலஸ்தீனிய முஸ்லீம்களின் வீடுகள் இவ்வாறு அழிக்கப்பட்டு யூதர்களுக்கு வழங்கப்படுகின்றன.

பலஸ்தீன முஸ்லீம்களின் புனிதத் தலங்களுக்குள் அத்துமீறிச் செல்லும் யூதப் படையினர் உலக முஸ்லீம்களின் மூன்றாவது முக்கிய புனிதத் தலமான மஸ்ஜிதுல் அக்ஸாவையும் மாசுபடுத்துகின்றனர். வலுக்கட்டாயமாக மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசலுக்குள் நுழையும் அவர்களும் யூதத் தீவிரவாதிகளும் அதனை அழிக்கும் திட்டத்திலும் செயற்படுகின்றனர். இதனை எதிர்த்தமைக்காகப் புனித அல்அக்ஸா மஸ்ஜிதின் முப்தியும், இஸ்லாமிய அமைப்பின் தலைவருமான செய்க் இக்ரிமா, ஸப்ரி அவர்களைத் தாக்கியும் உள்ளனர். மஸ்ஜிதுல் அக்ஸாவின் அல் மகாரிபா நுழைவாயலும் துப்பாக்கிகளால் தகர்க்கப்பட்டுள்ளது. புனிதத் தலங்களையும், இறை வணக்கத்தில் ஈடுபடுபவர்களையும் கொடுமைப்படுத்தும் யூதப் படையினரின் அட்டகாசங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இஸ்ரேலியச் சிறைக் கூடங்களில் பலஸ்தீனச் சிறுவர்கள் நிரம்பி வழிகின்றனர். இஸ்ரேலியப் படையினரால் அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் சொல்லும் தரமன்று. மஸ்கோவியா சிறையில் சித்திரவதைக்குள்ளாகும் சிறுவர்களைப் பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கான கமிசனர் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அறிவுறுத்தல்கள் வழங்கிய போதும், இஸ்ரேலியப் படையினர் அதுபற்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கமிசனர் குற்றம் சாட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியமும் 160 பலஸ்தீன சிறுவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றி குற்றம் சாட்டியுள்ளது. இஸ்ரேலிய யூதர்களின் சிறைகளில் 12 வயதுக்கும், பதினெட்டு வயதுக்கும் உட்பட்ட சிறுவர்கள் நிறைந்துள்ளனர். 2001 ஆம் ஆண்டில் மட்டும் 650 பலஸ்தீனச் சிறுவர்கள் ஸியோனிச யூதர்களினால் சிறைகளில் சித்திரவதைக்கும் கொடுமைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

புனித மஸ்ஜிதுல் அக்ஸாவைத் தீவிரவாத ஸியோனிச யூதர்கள் தங்களது கோவிலாக மாற்ற வேண்டும் என்பதில் முனைப்புடன் செயற்படுகின்றனர். முஸ்லீம் உலகம் குறிப்பாக அறபுலகம் இதற்கு எதிர்ப்பைத் தெரிவித்தாலும், ஆக்கபூர்வமாக எதனையும் சாதிக்கும் ஆற்றல் அந்நாடுகளுக்கில்லை. மேற்குலகின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டுள்ள அந்நாடுகளால் பகிரங்கமாகப் பலஸ்தீன முஸ்லீம்களுக்கு உதவும் சக்தியுமில்லை. முஸ்ஜிதுல் அக்ஸா உலக முஸ்லீம்களின் சொத்து என்பதை அண்மைக் காலத்தில் முஸ்லீம்களுக்குப் பகிரங்கமாக உணர்த்தியவர் இமாம் கொமெய்னி அவர்களாவர். ஈரான் இஸ்லாமியக் குடியரசு 2001 ஆம் ஆண்டில் அகில உலக மகாநாடொன்றைக் கூட்டி மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கும், பலஸ்தீன இன்திபாழாவுக்கும் அரசாங்க ஆதரவை நல்கியது. லிபியா அறபு ஜமாஹிரியாவும், சிரியாவும் மஸ்ஜிதுல் அக்ஸா விவகாரத்துக்கும் பலஸ்தீன முஸ்லீம்களின் போராட்டத்துக்கும் முன்னுரிமை அளிக்கின்றன. மஸ்ஜிதுல் அக்ஸா உலக முஸ்லீம்களின் பொதுச் சொத்தாகும். அதனை மீட்டெடுப்பதில் இலங்கை முஸ்லீம்களுக்கும் பங்குண்டு என்பதை நாம் மனமார உணர்ந்து எமது பங்களிப்பையும் செய்வது நமது கடமையாகும்.

சிலுவை யுத்த காலத்தில் ஐரோப்பிய ஆட்சியாளர்களின் தலைவனாக விளங்கிய சிங்க நெஞ்சம் படைத்த இங்கிலாந்து ரிசார்ட் மன்னனுக்கு ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி மஸ்ஜிதுல் அக்ஸாவைச் சிலுவை யுத்த வீரர்களிடமிருந்து மீட்டெடுக்கும் போரின் போது இவ்வாறு கூறினார். “நீங்கள் உங்களது படைப்பலம் இலட்சக் கணக்கானது என்பதில் பெருமை கொண்டுள்ளீர்கள். ஆனால் நாங்கள் எங்களது நம்பிக்கையிலும், புனித இலட்சியத்திலும் உறுதி பூண்டுள்ளோம். நீங்கள் உலகாயத வாழ்க்கையில் பற்றுக் கொண்டவர்கள். நாங்கள் எங்களது வாழ்க்கையை மறுமைக்காக அமைத்துக் கொண்டவர்கள். மரணத்தை நாடுபவர்களை ஒருபோதும் வெற்றி கொள்ள முடியாது.”

“விசுவாசிகளே! அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்து வெட்டப்பட்டோரை, இறந்து விட்டவர்களென நீங்கள் ஒருபோதும் எண்ண வேண்டாம். அவர்கள் நிச்சயமாக உயிரோடு இருக்கின்றார்கள், அன்றி அவர்கள் இறைவன் புறத்திலிருந்து அவர்களுக்கு ஆகாரமும் அளிக்கப்பட்டு வருகின்றது.” (அல்குர்ஆன் - 3:169)

**மேலும் (நபியே! யூதர்களாகிய) அவர்கள், மற்ற மனிதர்களை விடவும் (குறிப்பாக இணைவைத்து வணங்கும்) முஷ்ரிக்களைவிடவும் (அதிகநாட்கள்) உயிருடன் (வாழ்ந்து) இருப்பதில் மிகவும் பேராசை உடையவர்களாக இருப்பதை நிச்சயமாக நீர் காண்பீர்! அவர்களில் ஒவ்வொருவனும் தான் ஆயிரம் வருடங்கள் வாழ்ந்திருக்க வேண்டாமா என விரும்புவான். (அவ்வாறு அதிக நாட்கள்) அவன் வாழ்ந்தாலும், அது வேதனையிலிருந்து ஒரு சிறிதும் அவனைத் தப்பவைத்து விடமாட்டாது. அல்லாஹ் அவர்கள் செய்வதை உற்று நோக்கியவனாக இருக்கின்றான்.**
**(அல் குர்ஆன் 2:96)**